[27th January 1970

Headmasters of former District Board Schools.

*a 31. *Q.*—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) whether separate lists for male teachers and female teachers are adopted for giving promotion to the posts of Headmasters in the former District Board High Schools in Ramanathapuram District ; and

(*b*) whether seniority, which is considered essential for promotions has not been affected by the adoption of the above procedure ?

முன்னுள் கழக உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முன்னுள் கழக உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வு கொடுப்பதில் ஆண்களுக்கு தனி பட்டியலும், பெண்களுக்கு தனி பட்டியலும் பின்பற்றப்படுகிறதா ?

(இ) இம் முறை பின்பற்றப்படுவதால் பதவி உயர்விற்கு முக்கியமாகக் கருதப்படும் முது நிலை (Seniority) பாதிக்கப்படவில்லையா ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆண்கள், பெண்கள் பள்ளிகளுக்கான தனித்தனிப் பணி முதுநிலைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, பணி முதுநிலை வரிசைப்படி பி.டி. உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுவதால் பணி முதுநிலை வரிசை பாதிக்கப்படாது. பதவி உயர்வுக்கென பொதுவான பணி முதுநிலைப் பட்டியல் எதுவும் வைத்து வரப்படுவதில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஆண்கள் பள்ளிகளில் சில பெண்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அந்தத் தலைமையாசிரியை தவிர அந்தப் பள்ளியில் மாணவர்களோ, ஆசிரியர்களோ பெண்களே இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலைமையாசிரியையாக அனுப்பிவிட்டால், அந்த இடத்தில் ஒரு ஆண் தலைமையாசிரியராக உயருவதற்கு இடமிருக்கிறது. அதை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் இருக்கின்ற பெண் ஆசிரியர்கள் தலைமையாசிரியையாக ஆகலாம். ஆனால் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆண் ஆசிரியர்களை நியமிப்பதில்லை. அவர்கள் தலைமையாசிரியராக அங்கே ஆக முடியாது. ஆகையால் இந்தப் பட்டியலில் இருந்து வருகிற காரணத்தால்: இவர்களுடைய பட்டியல் தனியாக வைக்கவேண்டியிருக்கிறது. மேற்கொண்டு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பெண்கள் ஆண்கள் இருபாலாரும் சேர்க்கப்படுகிற சூழ்நிலை இருக்குமானால், குறைந்த அளவு ஒரு பெண் ஆசிரியையாவது, அது கல்லூரியாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும், இருக்க வேண்டுமென்று நியதி இருக்கிறது. ஆனால் அந்த உயர்வு வரும்போது உரிய உயர்வு கொடுக்நத் தனித்தனியாக வைக்கப்படவேண்டியிருக்கிறது. பொதுவாக ஒரே பட்டியல் வைக்கவேண்டுமென்று இருந்தால், கீழே ஜூனியராக இருக்கும் பெண் ஆசிரியையை தலைமையாசிரியையாக உயர்த்த வேண்டி வரும். அப்படி வந்தால், மேலே இருக்கிறவர்களுக்கு பேப்பர் போஸ்டிங் கொடுத்து விட்டு, அவர்களுக்குக் கொடுப்பதா என்ற பிரச்னை வரும். பெண் ஆசிரியைகளை ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் நியமிக்கலாமா என்று வரும்போது, சில இடங்களில் அவர்கள் தேவைப்படும்போது தனிப்பட்டியலும் தேவைப்படுகிறது. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் உரிய காலத்தில் தலைமையாசிரியைகள் நியமிக்கப்படுவார்கள்.

a Postponed from the list of questions for 23rd January 1970.

27th January 1970]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் இருக்கிற பெண் தலைமையாசிரியை பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தால், அதை நிறைவேற்ற வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிக் கொண்டு வரும்போது, பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பணி புரிகிற பெண் ஆசிரியைகள்தான் தடுக்கக்கூடும். தங்களுக்குள்ள வாய்ப்பை அங்கிருந்து வந்தவர் கெடுக்கிருர்கள் என்று சொல்வார்கள். ஆகையால் இதில் உள்ள சங்கடங்கள் ஆராயப்படவேண்டியிருக்கிறது.

Teacher-pupil ratio

a* 32. *Q.*—THIRU V. THANGAPANDIAN AND THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that it is not possible to impart education of a good standard, since the teacher-pupil ratio in most of the educational institutions in Tamil Nadu is very high ; and

(*b*) if so, the action taken thereon ?

ஆசிரியர்–மாணவர் வீதாசாரம்

திரு. வி. தங்க பாண்டியன் and திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழ் நாட்டின் அநேக கல்வி நிலையங்களில் ஆசிரியர்–மாணவர் வீதாசாரம் மிக அதிகமாயிருப்பதால் தரமான கல்வி போதிக்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியவருமா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) தற்பொழுது நடைமுறையில் இருந்து வரும் ஆசிரியர்–மாணவர் விகிதத்தின் காரணமாகக் கல்வித் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி நிலையங்களிலிருந்தோ, பள்ளிக் கல்வித் துறை ஆய்வு அலுவலர்களிடமிருந்தோ பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு முறையீடுகள் எவையும் வரவில்லை.

(இ) எழாது.

திரு எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, திருச்சியில் நடந்த ஒரு மகாநாட்டில் இந்த ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவ்வளவாகக் குறைக்க இயலாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சொன்னுர்கள். 1:55 என்ற விகிதத்தையாவது இனிமேல் வரக்கூடிய ஆசிரியர்களுக்கு அமுலாக்க வேண்டுமென்றும் அதனுல் இப்போதிருக்கிற ஆசிரியர்கள் யாரையும் வெளியே அனுப்பக் கூடாது என்றும் அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விகிதாச்சார முறை நாம் கணக்கெடுக்கிறபடி இல்லாமல், ஓரளவு மாணவர்கள் விகிதம் அதிகமாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு ஆண்டுக்கு இவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று கேட்டால், ஒதுக்கப்படுகிற நிதிநிலையை ஒட்டி, ஓரளவு ஆசிரியர்கள் ஒதுக்கப்படுகிருர்கள். அவர்களை எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் நிலையில் தான் விகிதாசாராம் அமைகிறது. இருக்கிற ஆசிரியர்களை வெளியே அனுப்பாமல், ஏற்றுக் கொள்ளும் வழிவகைகளை அரசு காணும்.

a.—Postponed from the list of questions for 23rd January 1970.